ஸ்ரீ திரிபுரிசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்யதர்மம்.

முன் செய்யப்பட்ட வேலைக்குப் பயன் பிந்திகிடைக்கும். காலையில் சமையல் செய்தால் மத்தியான்னத்தில் புஜிக்கலாம். கார் காலத்தில் உழுதுபயிரிட்டால் சிலமாதங்களானபின் தான்யங்களை அடையலாம். பால்யத்தில் படித்தால் யௌவனத்தில் சம்பாதிக்கலாம். யௌவனத்தில் பணத்தைத் தேடி வைத்திருந்தால் முதிர்ந்தவயதில் சுகமாயிருக்கலாம். இந்த உதாஹரணம்போல் ஒரு ஜன்மத்தில் செய்தவேலையின் பயன் ஜன்மாந்தரத்தில்கிடைக்கும். ஒருவனுக்கு இயன்றவரை உபகாரம்செய்து வைத்திருந்தால் அதற்குப்ரத்யுபகாரத்தை பிந்தியடையலாம். இதுபோல் தவங்களாலும், விரதங்களாலும், புண்ணியங்களாலும். அருமைப் புதல்வனைப் பெற்று வளர்த்து நல்லதைப்புகட்டி வந்தால் அந்த சத்புத்ரன் மாதாபிதாக்கள் செய்த நன்றியை மறவாமல் அவர்களது அபரவயசில் அவர் சொற்படி நடந்து பணிவிடை செய்து உபகரித்து மறுபிறப்பிலும் சிராத்தாதிகளால் உபகாரம் செய்துவருகிறான். இவ்வாறு பரஸ்பரம் உபகாரத்தை திருஷ்டமாகவும் அதிருஷ்டமாகவும் செய்துகொண்டு பிராணிகள் நம் பாரத பூமியில் இஹத்திலும் பரத்திலும் சுகமாய் வாழ்ந்துகொண்டு வருகிறார்கள். இதற்காகவே பாரதவாசிகளுக்கும் பரலோகவாசிகளுக்கும் விட்டுப் பிரியாத ஸம்பந்தத்தை பரமேசுவரன் கற்பித்திருப்பதாக சாஸ்திரம் கூறுகின்றது. இந்த ப்ரயோஜனத்தை உத்தேசித்து தான் பர்த்திரு பார்யைகளாக விவாஹமுறைப்படி சேர்ந்த ஸ்திரீபுருஷர்கள் விட்டுப்பிரியாமல் புத்திரபாக்யத்தைப் பெற்று வாழவேண்டுமென்றும் இடையில் பிரிந்து விடக்கூடாதென்றும் ஒரு சமயம் புத்ரஸம்பத்து கிடைக்காமற் போய்விட்டால் இஹத்தில் ஒற்றுவாழ்ந்துதர்மத்தைத்தேடியது போல் பரலோகத்திலும் பரஸ்பரம் பாரலௌகிககார்யங்களை செய்ய வேண்டுமென்று விதிக்கப்படுகின்றது. பிதா, புத்திரனை அன்புடன் பார்க்க வேண்டுமென்றும், புத்ரன் பிதாவினிடத்தில்பக்திபாராட்டிவரவேண்டும் என்றும் பிறகு பரலோகத்தில் சிராத்தாதிகளால் உபகாரம் செய்ய வேண்டுமென்றும்சாஸ்திரம்கட்டளையிடுகின்றது. பரலோகஸம்பந்தத்தை பெரிதாக பாவித்துத் தான் ஸிருஷ்டிகாலந்தொடங்கி நாளதுவரையிலும் நம் பாரத நாட்டாரது நடவடிக்கைகள் நடந்து வந்திருக்கின்றன. பரலோகப்பயனையே பெரிதாக நினைத்து வந்தபடியால் அதற்கு இடையூறாகத் தோன்றும் ஐஹிக வியாபாரங்களை அடியோடு விட்டுவிடுவார்களே அன்றி இவ்வுலக வியாபாரத்திற்காக தங்களுக்குள்ள பரலோக பாத்யதையை இழந்துவிடமாட்டார்கள். இப்படி உறுதியாயிருந்த பாரதமக்களின் மனதையும் கலைத்துவருகிறார்கள். அதிலகப்பட்டு சிலர் பாரலௌகிக சிரேயஸ்ஸையும் இழந்துவிடத்துணிகிறார்கள், இதெல்லாம் கலியின் விலாசமே. ஆஸ்திகர்கள் அந்த வலையில் சிக்கிக்கொள்ளாமல் பிராசீன வழக்கத்தையே அனுசரித்து நடப்பார்களாக. சுபம் !

பத்திராதிபர்,

ஆர்ய தர்மம்.
ப்ரஜாபதி-ஸு வைகாசி-மீ ௧௪௨

# சுத்தஸந்ததியேகுலத்திற்குமேன்மை

நற்குலத்தில் ஜனித்த புருஷன் பூர்ணனாவது நல்ல புத்திரனாலேயன்றி மற்றவைகளாலல்லவென்று சுருதியின் கூற்று. சுத்தர்களான தம்பதிகளுக்கு வைதிகமுறையில் சுத்தஸந்ததியாகப் பிறந்தவனே நல்ல புத்திரனெனப்படுவான். ஸமமான ஜாதியுள்ள ஸ்திரீபுருஷர்கள் சிஷ்டர்களான பெரியோர்களின் ஸம்மந்தப்படி அக்னி, அந்தணர், மற்ற தேவர்கள் ஸாக்ஷிகளாயிருக்க வைதிக விதிப்படி உசிதகாலத்தில் விவாஹமுறைப்படி சேர்ந்தால் சுத்த தம்பதிகளாவார்கள். அப்படிக்கில்லாமல் ஒருகாலத்தில் இஷ்டப்படி சேர்ந்தும், சின்னாட்களில் ஸ்வேச்சையாகப் பிரிந்தும் ஸொத்துக்கும் ஸந்ததிக்கும் சண்டையிட்டுக் கண்டவனோடு திரிந்துகொண்டுமிருப்பவர்கள் சுத்த தம்பதிகளாகார்கள். அவர்களுக்கு ஜனித்த ஸந்ததியும் சுத்தமானதாகாது. அதனால் குலத்திற்குத்தாழ்மையே உண்டாகுமேயன்றி மேன்மை உண்டாகாது. சில த்வீபாந்தரங்களில் ஸ்வேச்சையாக ஸ்திரீபுருஷர்கள் சேருவதும் பிரிவதுமாயிருப்பதாகப் பத்திரிகைகளில் காணப்படுகின்றது. அதையே பெரிய நாகரீகமென்றும் குருட்டுத்தனமான கட்டுப்பாடில்லாமல் இந்த நிலைமை நமக்கு எப்பொழுது கிடைக்குமோ என்றும் சிலர் கருதுகின்றனர். த்வீபாந்தரத்தவர் கல்யாண கலஹத்தால் கஷ்டப்படுவதை பத்திரிகைகளில்இவர்கள்படிக்கவில்லை போலும். த்வீபாந்தரத்து சரித்திரங்களில் வியபிசாரமும், பரித்தியாகமும் அனேகஜாதியாரை அழித்துவிட்டதென்று பத்திரிகை மூலமாய் நன்கு தெரிவிக்கப்படுகிறதை இனியேலாவது பார்ப்பார்களா? வியபிசாரத்திற்கும், பரித்யாகத்திற்கும் காரணம் சுயநலம் நாடும் சுயேச்சையென்ற பைத்தியமே தவிர வேறில்லை. தனித்தனியே சிலருக்கு இந்நிலைமை சுகமாகத்தோன்றினும் சரி கஷ்டமாகத்தோன்றினும் சரி பொதுவாய் ஜனசமூஹத்திற்குப் பல

விதத்திலும் இது கஷ்டமே. சுத்தமான ஜனசமூஹத்தின் அபி விருத்தியை நோக்கி அரசாங்கத்தார் ஸ்திரீபுருஷர்கள் சுத்தமான முறையில்கூடவேண்டுமென ஏற்பாடுசெய்துவந்தார்கள். இப்பொழுது ராஜாங்கமுறையில் அப்படியேஏற்பாடுசெய்வதுநலமாயிருக்கும். வியபிசாரம் அதிகரிப்பதினால் ஜனசமூஹத்தில் கலகமேயுண்டாகும். கலகமிருந்தால் ஒற்றுமையிராதென்பது யாவருமறிந்ததே. மேலும் வியபிசரிக்கும் ஸ்திரீபுருஷர்கள் தங்கள்குழந்தைகளைக் கூடப் பிரியமாய்ப் பாதுகாத்து விருத்திக்குக்கொண்டுவரமாட்டார்கள். இதனால் பல ஜாதிகளுக்கும் சீக்கிரத்தில்அழிவு உண்டாகுமென்று சாஸ்திரம் பலவாறாகப் போதிக்கின்றது. அன்றியும் மனிதர்களுக்கும் மிருகங்களுக்குமுள்ள வித்யாஸம் ஒன்றுதான். அதாவது பகுத்தறிவு என்பதே. சுயேச்சையில் விருப்பமானது மனிதன் உள்பட எல்லா ஜீவஜந்துக்களுக்கும் இயற்கையான குணம். அதில் இச்சை சென்றவாறு நடப்பது மிருகதர்மம். இச்சைபோனவாறு விடாமல் அதை அடக்கி ஆளும் பகுத்தறிவென்ற குணமொன்றுதான் மனிதனைப்பிரித்துக் காண்பிப்பது. தங்களது எண்ணங்களையும் நடவடிக்கைகளையும் கவனித்து இது தர்மமானது, இது அதர்மமானது, என்றுணர்ந்து தங்களுடைய புத்திப்ரகாசத்தால் தேர்ந்தெடுத்து தர்மத்தைப்பின்தொடர்ந்து அதர்மத்தைச் செய்யாமல் விடுவதுதான் மனிதனுக்குச் சிறப்பாகும். இதுகாரணத்தாற்றான் உலகத்தில் விதிவிலக்குகளடங்கிய நீதி சாஸ்திரங்கள் பல ஏற்பட்டிருக்கின்றன. பலர் இது நல்லது என்று கைக்கொள்ளும் நல்வழியில் தனிமையான ஒருவனது வெறுப்பு விருப்பங்களை நோக்காது நடக்கச்செய்வது மனிதனுடைய மற்றொரு சிறப்பான குணம். முறைபறியாது மனதிற்கிசைந்தவாறு ஸ்திரீபுருஷ ஜாதிகள் சுயேச்சையாய்க் கூடி கலந்து சந்தான உற்பத்தி செய்வது மிருகதர்மம். இது மானிட தர்மமல்ல. விதிவிலக்குகளையறிந்து விதிப்படி நடப்பதுதான் மானிட தர்மம். இந்த உண்மையைத்தான் சுருதி ஸ்மிருதிபுராண இதிஹாஸ நீதி சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. பரலோகத்திலும் புனிதமான புத்திரஸந்தானமுள்ளவனுக்கு பிரீதி அதிகமாக உண்டாகுமென்றே சாஸ்திரம்ஸந்தானசுத்திக்காக ஸ்திரீரக்ஷணத்தைப் பலவிதத்திலும் வற்புறுத்துகிறது. துவீபாந்தர வாசிகளும் இந்த வழியில் பிரவேசித்துச் சீர்திருத்துவாரயின் அவர்களுக்கும்

இஹபரங்களில் நன்மையுண்டாகும். சுயேச்சைப்பைத்தியம் பிடித்தவர்களைப்பார்த்து பாரத நாட்டாரும் பிராந்திபடைந்துவிடுவார்கள். ஸ்திரபுத்தியுள்ளவர்களை மாற்றிவிட பலவித பிரயத்தனம் செய்து வருகிறார்கள். அது பயன்படாமல் நம்பாரதநாடு பண்டைய வழக்கத்திலேயே நிலை பெற்று நீடூழிவாழும்படி அம்புலி சூடி அருள்புரிவாராக.

சுபம் !

பத்திராதிபர்.

---

# ஸநாதன தர்மஸம்ரக்ஷண ஸபை.

(380-வது பக்கத்தொடர்ச்சி)

இவ்வுத்தம குணசீலரான பிரம்மஸ்ரீ சாஸ்திரிகளவர்களை இச்சபை அபிமானிகள் கும்பகோணம்போய் அவர்கள் வாஸஸ்தலத்தை அடைந்து அக்ராஸனம் வஹிக்க வேண்டுமென்று பிரார்த்தித்தும் சபை அபிமானத்தாலும் மதம் சாஸ்திரங்களின் அபிமானத்தாலும் தன் காரியங்களை ஒதுக்கி மனமிசைந்துஒப்புக்கொள்வதாய் வாக்களித்து அனுப்பியபடி இவர்கள் 8-ம் தேதி மாலையிலேயே தஞ்சைக்கேகினர்.

இவர்களது வரவை அறிந்த ஸபையார்கள் லௌகிக வழக்கத்தையும் கைவிடாமல் ரயில்வேஸ்டேஷன்சென்று காத்திருந்து ரயில் வந்ததும் இறங்கி சாஸ்திரிகளவர்களை உபசரித்து அவர்களுக்கென்றே ஏற்படுத்திபிருந்த ஜாகையில் அழைத்துவந்து சேர்த்தனர்.

பிறகு யாவரும் சாயங்கால கன்மாவை விதிப்படி முடித்துக்கொண்டு சுமார் 7-மணிக்கு மறுநாள் விஷயங்களை இவ்விவ்விதம் நடத்தவேண்டுமென்பதைப்பற்றி நன்கு ஆலோசிப்பதற்காக விஷயாலோசனைக் கமிட்டி என்று ஓர் பொதுக்கூட்டம் சகாநாயகர் வீதியில் லேட் கிருஷ்ணசாமிநாயகர் வீட்டில் கூடியது. அப்போது பலஆஸ்திக லௌகிகர்களும் பண்டிதர்களும் பிரஸன்னமாய் இருந்தனர். அவ்விதக்கூட்டத்தில் விஷயங்களை பரிசீலனை

செய்து இன்னின்ன விஷயங்களைப் பற்றி இன்னின்னார் 1-மணி நேரம் உபன்யசித்தபடி கேட்டுக்கொள்ள வேண்டுமென்றும் இன்னும் சில விஷயங்களை உபன்யசிக்க மறுநாள் வருவதாய் எதிர்பார்க்கப்படும் பண்டிதர்கள் மூலம் கேட்டுக்கொள்ளவேண்டு மென்றும் இன்னின்ன தீர்மானங்கள் ஸபை முன் கொண்டுவர வேண்டுமென்றும் ஒருவாறு தீர்மானித்து எழுதிக்கொண்டதில் மணி 9-ஆய்விட்டபடியால் அத்துடன் நிறுத்திக்கொண்டு மறு நாளாகிய 9உ ஸபை ஆரம்பமானதால் அன்று அதிகாலையில் யாவரும் ஸ்நானம் செய்துவிட்டு அவரவர்கள் நித்தியகன்மாவையும் முடித்துக்கொண்டு காலை 7-மணிக்கே மேலவீதியில் ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் ஆலயத்திற்கு யாவரும் தங்கள் மித்திரர்களுடன் விஜயம் செய்யவேண்டுமென்று ஸபை காரியதரிசியால் கேட்டுக் கொள்ளப்பெற்று ஸபைகலைந்தது.

அவ்விதமே 9உ காலை $6\frac{3}{4}$-மணிக்கே ஆஸ்திகர்கள் அம்பாள் ஆலயத்தின் வாசலிற் குழுமிவிட்டனர். பிறகு யாவரும் வேத கோஷத்துடன் அம்பாள் சன்னதி சென்று இஷ்டத்தை பிரார்த்தித்து அர்ச்சித்து பிரசாதம் பெற்று பிரதக்ஷிணமாய் அக்ராசனாவர்களை முன்னழைத்துக்கொண்டு ஸபைநடத்த தீர்மானிக்கப் பெற்றிருந்த ஸகாநாபகரின் உயர்ந்த மாளிகையை அடைந்தனர். பிறகு யாவரும் அமைதியாய் அக்ராஸனரின் பின் அமர்ந்ததும் தர்மரக்ஷண சபையின் நிரந்தர பிரசிடெண்டும் தற்சமயம்வரவேற்புக் கமிட்டித் தலைவரான உ. வெ. T. கோதண்டராம அய்யங்கார் அவர்கள் ஸபையை அபிமானித்து உள்ளூரிலிருந்தும் அயலூர்களிலிருந்தும் வந்திருந்தவைதிக லௌகிக ஆஸ்திகர்களுக்கு மனமார்ந்த வந்தனத்துடன் நல்வரவுகூறி பிறகு இச்சபை இப்போது கூட்டவேண்டிய நோக்கத்தையும் நாம் இனி அசட்டை செய்யாது ஊக்கத்துடன் நம் தேசத்திற்கும் நமக்கும் நம் சந்ததிக்கும் செய்யவேண்டிய கடமையையும் அதை எவ்விதம் நடத்த வேண்டுமென்று யோசிப்பதற்கே இப்போது கூடியிருக்கிறோம் என்பதையும் தெரிவித்து பிறகு இம்மகாசபையை இனிது நடத்திக்கொடுப்பதற்காகபிரும்மஸ்ரீசாஸ்திரிகளவர்களையேநான்பிரார்த்திக்கிறேன் என்றும் கூறி அமர்ந்தனர். பிறகு ஸபையோரின் குதூஹலமான கரகோஷத்தினிடையே மகாா-ா-ஸ்ரீ டி, எல். சுப்பய்யாவர்கள் எழுந்து சாஸ்திரிகளவர்களின் குணகணங்களைப்

புகழ்ந்து இத்தகைய மஹான் தான் இச்சபையின் தலைமையை ஏற்று நம் போன்றவர்களுக்கு நன்மொழி அருளவேண்டுமென்ற எண்ணத்துடன் கோதண்டராமய்யங்காரவர்களின் விருப்பம் தான் என்னுடையதும். இச்சபையோர்களுடையதும் என்று ஆமோதித்தார். பிறகு நீண்ட கரகோஷத்தினிடையே பிரும்மஸ்ரீ யக்ஞஸ்வாமிசாஸ்திரிகளவர்கள் அக்ராஸனத்தில் அமர்ந்தனர்.

பிறகுஇச்சபை அபிமானித்து வந்திருந்தபண்டிதர்கள் அக்ராஸனரைச்சூழ்ந்து அமர்ந்தனர். அவர்களுள் ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதி மகாஸ்வாமிகள் ஸ்ரீ அஹோபிலம். மடாதிபதிமகாஸ்வாமிகள் அவர்களால் ஸபையின் அபிவிருத்தியைக் கோறி அனுப்பப்பட்ட ஸ்ரீமுகங்களைத்தாங்கி வந்திருந்த பிரும்மஸ்ரீ பாஷ்யபாவக்ஞV. S. வெங்கட்டராமசாஸ்திரிகள், ஆஸ்தானபண்டிதர்ஆர்யதர்மம் பத்திராதிபர் 2. தில்லையம்பூர் சக்ரவர்த்தி ஆசாரியாஸ்வாமிகள், அஹோபிலமடம் ஆஸ்தானபண்டிதர், இனி பிம்மஸ்ரீ திருவையார் விசுவனாதசாஸ்திரிகள் அவர்கள், 4. வைத்தியனாதசாஸ்திகள் அவர்கள், 5 உ. வெ. தாதாசார்யஸ்வாமிகள், திருவையார் ஸம்ஸ்கிருத உயர்தர கலாசாலையில் மூன்னிருவர்களும் பண்டிதர்கள், 6. பிரும்மஸ்ரீ எஸ். கணேசசாஸ்திரிகள் அவர்கள், 7 மதுரை M. N. சுப்ரம்மண்ய சாஸ்திரிகளவர்கள், 8. தில்லையம்பூர் உ. வெ. வெங்கடாசார்யசுவாமிகள் அவர்கள், 9. தஞ்சை சரஸ்வதிமஹால் ஸம்ஸ்கிருதபண்டிதர் N. வைத்யனாதசாஸ்திரிகளவர்களும் முக்கியமானவர்கள். பக்கத்துக்கிராமங்களிலிருந்தும் கும்பகோணம் முதலியவிடங்களிலிருந்தும் விஜயம்செய்திருந்த பிரபுக்களும், உள்ளூர்ஆஸ்திகர்களும், சேர்ந்து400-பெயர்களுக்கு மேல் கூடினர். ஸ்திரீகளும் அடுத்த அறைகளில் அமர்ந்து சாஸ்திர நடவடிக்கைகளை கவனித்துக் கவர்ந்திருந்தனர். அதில் வயது முதிர்ந்த ஸ்திரீகளே கூடியிருந்தனரேதவிர அச்சம் நாணம் முதலிய ஸ்திரீகுணங்களை துறந்து இக்கால லௌகிக ஸ்திரீ கூட்டங்களில் கலக்கும் இளம்பருவப் பெண்போல ஒருவரும் காணப்படவில்லை என்பதை இங்கு விளக்காமலிருக்க முடியவில்லை. கூடியிருந்த முதிர்ந்த வயதுள்ள ஸ்திரீகளும் ஸ்திரீ தர்மத்திற்கேற்றபடி தலை குனிந்து செவிசாய்த்தனரேயொழிய முகம்காட்டி தலை அசைக்கவில்லை என்பது விசேஷம்.

இனி 8¼-மணிக்கு ஆரம்பிக்கவேண்டுமென்று அக்ராஸனர் கூறியதும் பிரம்மஸ்ரீ ஆஸ்தான வித்வான் வி. எஸ். வெங்கட்டராம சாஸ்திரிகள் எழுந்து ஸ்ரீ ஸ்வாமிகளின் திவ்யசரணங்களின் ஆக்ஞாரூபமான ஸ்ரீமுகத்தைப் பூஜித்து படனம் செய்ய ஆரம்பித்தனர். யாவரும் எழுந்து கைகட்டி நின்றனர். பிறகு அவ்விதமே தில்லையம்பூர் சக்ரவர்த்தி ஆசார்யஸ்வாமிகளும் அஹோபிலம் ஸ்ரீ ஆசார்யர்களுடைய ஸ்ரீமுகபடனம் செய்தபின் யாவரும் வணங்கி ஸ்தானத்திலமர்ந்தனர். பிறகு அக்ராஸனர் தனது உபன்யாசத்தை ஆரம்பித்தனர். (இன்னும்வரும்)

M. N. சுப்ரமண்யசாஸ்திரிகள்.

---

# அத்வைதமதம் வைதிகம்.

(369-வது பக்கத்தொடர்ச்சி)

மீமாம்ஸகர்களுக்குத் தேவதையே கிடையாது என்பது அபிப்பிராயமில்லை. தேவதைகளே இல்லாதபோனால் யாகாதிகர்மங்களைச் செய்து தேவஜன்மத்தை அடைந்து ஸ்வர்கம் முதலிய பலத்தை அனுபவிப்பதாகக் கூறும் வேதங்கள் எப்படி பிரமாணங்களாகும். அப்பொழுது ஸ்வர்காதி சுகத்திற்காக விதிக்கப்பட்டிருக்கும் கர்மங்கள் வியர்த்தங்களாகஆய்விடுமல்லவா. ஆகையால் மீமாம்ஸகர்கள் தேவதைகளே கிடையாது என்று சொல்லவில்லை.

नास्माकं शब्दएवदेवता नाकसदामिन्द्रादीनां देवतात्वांगीकारात् ॥

'எங்களுக்குச் சப்தமே தேவதை சப்தத்தைத் தவிர வேறு தேவதை கிடையாது என்பதில்லை. ஏனெனில் ஸ்வர்க்கத்தில் வசிக்கின்ற கர்ம பலன்களை அனுபவிக்கின்ற இந்திராதிகளை தேவதைகளென்று ஒப்புக்கொண்டிருப்பதால்' என்று மீமாஸகர்களே கூறி இருக்கிறார்கள். ஆகையினால்தான் சாபரபாஷ்யவார்த்திககாரரான குமாரிலபட்டரும் கிரந்தத்தின் ஆதியில் विशुद्धज्ञानदेहाय என்னும் சுலோகத்தினால் தேவதேவனாகிய மஹாதேவனை நமஸ்கரித்திருக்கின்றார், உம்பேகபட்டரும்,

ग्रन्थारम्भे अभिमतदेवतानमस्कारं करोति वार्तिककारः ॥

கிரந்தத்தின் துவக்கத்தில் இஷ்டதைவத்தின் நமஸ்காரத்தை வார்த்திககாரர் செய்கின்றார்' என்று அவ்விடத்தில் உரை எழுதியிருக்கின்றார். ஆனால் தேவதாதிகரணத்தில் தேவதை கிடையாது என்றுசொல்லியிருப்பதற்கு தேவதையைஒப்புக்கொள்வது விரோதப்படுமே என்றுஆசங்கித்து யாகத்தில் सोमायस्वाहा इन्द्रायस्वाहा என்று ஆஜ்யம் முதலிய திரவியத்தை தியஜிப்பதற்கு உத்தேச்யமாய் அதனால் கர்மாவிற்கு அங்கபூதமாயுள்ள தேவதையே சப்தத்திற்கு வேறாய் சேதனமாய் விக்ரஹாதிகளையுடையதாய் ஒப்புக்கொள்ளப்படுகிறதில்லை என்று தேவாதிகரணத்தில் சொல்லப்பட்டிருக்கிறதே தவிர கர்மாவிற்கு அங்கமாயில்லாத தேவதைகளை ஒப்புக்கொள்வதில் ஒருவிதமான ஆக்ஷேபமும் மீமாம்ஸகர்களுக்குக் கிடையாது என்று பரிஹாரம். சாஸ்திரதீபிகையின் முதல்பாகமாகிய தர்க்கபாதத்தின் வியாக்யானமாகிய ஸித்தாந்த சந்திரிகையில் ராமகிருஷ்ணபட்டர் கூறியிருக்கின்றார். பகவான் ஜைமினி மஹர்ஷியும் வேதபாதஸ்தவம் என்கிற வேதத்தையே நான்காவது பாதமாயுடைய சுலோகங்களோடு கூடிய ஸ்தோத்ர கிரந்த விசேஷத்தால் பரமேசுவரனை ஸ்துதித்திருக்கின்றார். மீமாம்ஸையில் ஒவ்வொரு கிரந்தக்காரர்களும் கிரந்தாரம்பத்தில் இஷ்டதைவ வந்தனங்கள் செய்திருக்கின்றார்கள். ஆகையால் மீமாம்ஸகர்களுக்கும் தேவதைகளும் தேவதேவனானபரமேசுவரனுமுண்டு ஆனால் அந்த தேவதைகளே கர்மபலப்ரதர்களென்று ஒப்புக்கொண்டால் தேவதைகள் ப்ரதானர்களென்றும் அவர்களுக்கு ஆராதன ரூபங்களாய்க் கர்மாக்கள் அங்கங்களாகிஅப்ரதானங்களென்றும் முடிந்துவிடும்- அப்பொழுது स्वर्गकामोयजेत யாகத்தால் ஸ்வர்க்கத்தை ஸம்பாதிக்கக் கடவன் என்று யாகத்திற்கு ஸ்வர்க்கத்தை உண்டுபண்ணுவதில் பிரதானத் தன்மை கூறப்பட்டிருப்பது அனுபபன்னமாய்விடும் என்னும் கருத்துடன்,

अपि वा शब्दपूर्वत्वाद्यज्ञकर्मप्रधानंगुणत्वे देवताश्रुतिः ।

'யக்ஞம் முதலிய கர்மமே பிரதானமென்று ஸித்தாந்தம். யாகம் பல சாதனம் என்று வேதசப்தத்தில் சொல்லியிருப்பதால் தேவதையோவெனில் ப்ரதானமன்றுகர்மாவிற்குஅங்கமே' என்று தேவதாதிகரணத்தில்ஸூத்திரக்காரரான ஜைமினிமஹர்ஷியினால்கூறப்

பட்டிருக்கிறது. ஆகையால் கர்மாவில்உத்தேசிக்கப்பட்டு அங்கமாயுள்ள தேவதைதான்சப்தரூபமாய் அசேதனம்சரீரமுடையதன்று என்று மீமாம்ஸகர்களின் ஸித்தாந்தம். இவ்வித ஸித்தாந்தமும் பிரௌடிவாதமே தவிர யுக்திவாதமன்று. பிரௌடிவாதமாவது யுக்திக்குப்பொருந்தாமல் போனாலும் இப்படியும் ஒரு ஸித்தாந்தத்தைச் செய்வோம் என்று தென்பினால் செய்யும் வாதம். கர்ம மீமாம்ஸகர்களின் ஸித்தாந்தம் யுக்திவாதமாகாது பிரௌடிவாதமென்று பிரும்மமீமாம்ஸையில் முதல் அத்தியாயம் மூன்றாவது பாதம் எட்டாவது அதிகரணமாகிய தேவதாதிகரணத்தில் கூறப்பட்டிருக்கிறது. எப்படியெனில் விக்ரஹாதிகளையுடைய சேதனரூபங்களான தேவதைகளை கர்மாவினால் ஆராதிக்கப்பட்டு பலப்ரதங்களென்று ஒப்புக்கொண்டாலும் அவ்விததேவதைகள் ஒரே சமயத்தில் நடக்கும் பலயாகங்களுக்குப் போய் ஹவிஸ்ஸை ஸ்வீகரிக்க முடியும் தேவதைகள் யோகசக்திவாய்ந்தவர்களானபடியால் யோகிகளைப்போல் ஏககாலத்தில் அனேகம் சரீரங்களையெடுத்துகொள்வதாகசுருதிஸ்மிருதி முதலியதில்கூறப்படுகிறபடியால் அவ்விதமே ஸாமர்த்யவிசேஷத்தால் நம்மைப்போலொத்தவர்களுக்குக் காணப்படாமலே யாகதேசம் வந்து ஹவிஸ்ஸை தேவர்கள் ஸ்வீகரிப்பதும்பொருந்தும். அல்லது தேவதைகள் யாகதேசம் வராமல் போனாலும் ஸ்வஸ்தானத்திலிருக்குமவர்களை உத்தேசித்து யாகத்தில் அனேகம் யஜமானர்கள் ஹவிஸ்ஸைக்கொடுப்பதும் பொருந்தும் தேவதாப்ரஸாதத்தை அவாந்தர வியாபாரமாகக் கொண்டு கர்மாவினால் பலம் ஏற்படுவதாக நாமும் ஒப்புக்கொள்ளுகிறபடியால் கர்மப்ரதானம் அதற்கு தேவதை அங்கம் என்பது நமக்கும் பாதகமில்லை என்பது முதலிய யுக்திகளால் கர்மாங்கதேவதையின் நிராகரணமானது உசிதமன்று அனேக சுருதிஸ்மிருதிகளுக்கும் விரோதமானது என்று பிரும்மமீமாம்ஸா தேவதாதிகரணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

அப்படியிருக்கப் பிரௌடிவாதமாகவாவது கர்மாவே பலப்ரதம் தேவதை பலப்ரதமன்று என்று ஜைமினிமஹர்ஷி ஸித்தாந்தம் செய்வதற்கு என்ன அபிப்பிராயமென்றால் கூறுவாம். தேவதை பலப்ரதம் என்று சொல்லிவிட்டால் ஜனங்களுக்குக் கர்மாவில் சிரத்தை குறைந்து தேவதையை ஆராதித்துப் பலன்களை அடைய

பல மார்க்கங்களை கல்பித்து எப்படியாவது தேவதையை உபாசிக்கத் தொடங்கி விடுவார்கள். தேவதையை ஆராதிக்கவேண்டியது தானே எப்படி ஆராதித்தால் என்ன தேவதைதானே பிரதானம் எப்படி ஆராதித்தாலும் தேவதை பிரீதியை அடைந்து பலன்களை கொடுக்கும். இப்படித்தான் ஆராதிக்கவேண்டும் அப்படி ஆராதிக்கக் கூடாது என்று என்ன நிர்பந்தம் என்று கூறுவார்கள். வர்ணாச்ரமதர்மங்கள் வியவஸ்தையில்லாமல் போகும் அது வியவஸ்தையில்லாமல் போகவே கர்மபலன்களையும் ஈசுவரன் கொடுக்கமாட்டார். ஜனங்கள் அனர்த்தத்தையும் அடைவார்கள். ஆகையால் அவர்களுக்கு ஈசுவரனே இல்லை. அவர் கர்மபலன்களைக் கொடுப்பதில்லை- கர்மாவே ஸ்வதந்திரமாய் பலன்களைக் கொடுக்கின்றது. எவெவர்களுக்கு எந்தெந்த கர்மா செய்யும்படி வேதத்தில் விதித்திருக்கிறதோ அந்தந்த கர்மாதான் அவரவர்களுக்கு பலத்தைக்கொடுக்கும். மாறினால் பலன் கிடையாது. அனர்த்தமும் வரும் என்று சொல்லி கர்மாவில் சிரத்தையை விருத்திசெய்வதற்கே இவ்வித பிரௌடிவாதம் ஜைமினி மஹர்ஷியினால் பூர்வமீமாம்ஸா தேவதாதிகரணத்தில் கூறப்பட்டிருக்கின்றது ஜைமினிக்கும் உள்கருத்து தனது குருவாகிய வியாஸமஹர்ஷியினால் சொல்லப்பட்ட பிரும்மமீமாம்ஸா ஸித்தாந்தத்தினாலேதான். ஸர்வதர்சனங்களுக்கும் இதிலேதான் தாத்பர்யம். அப்படியில்லாமல் போனால் பரஸ்பரம் விருத்தமாகக் கூறும் கணாதர் கௌதமர், கபிலர், பதஞ்சலி, ஜைமினி, வியாஸர், என்கிற மஹரிஷிகளால் முறையே செய்யப்பட்ட வைசேஷிகம், நியாயம், ஸாங்கியம், யோகம், பூர்வமீமாம்ஸை, உத்தரமீமாம்ஸை, ஆகிய வேதாந்தம் ஆக ஆறு வித தர்சனங்களும் எப்படி ப்ரமாணங்களாக முடியும். वस्तुनि विकल्पायोगात् ஒருவஸ்துவானது இப்படியுமிருக்கலாம் அப்படியுமிருக்கலாம் என்று கூறமுடியாது என்கிற சித்தாந்தப்படி தத்துவவிஷயத்தில் பரஸ்பர விருத்தங்களான எல்லா தர்சனங்களும் எப்படிப்ரமாணங்களாக ஆகமுடியும். அப்படி ப்ரமாணங்களாக ஆகமுடியாமல் இருக்கும்பொழுது ஏதாவது ஒரு தர்சனத்தைத் தவிர மற்ற தர்சனங்கள் அப்ரமாணங்கள் என்றும் அதன் ப்ரவர்தகர்களான மஹரிஷிகள் அஸர்வக்ஞர்கள் பிராந்தர்கள் என்றுமல்லவோ கூறவேண்டிவரும். அவ்விதம் ஸர்வக்ஞர்களான மகரிஷிகளைக் கூறுவது உசிதமன்று.

ஆகையால் ஸகல தர்சனங்களுக்கும் அந்தந்த தர்சனக்காரர்களான மஹர்ஷிகளுக்கும் வியாஸதர்சனமாகிய வேதாந்ததர்சனத்திலே தான் பரமதாத்பர்யம். அப்படியிருந்தும் அதற்குப் பூர்வாங்கமாக அதிகாரிபேதத்தால் அந்தந்த அதிகாரிகளின் அபிருசிக்கேற்ப முதலில் ஒவ்வொரு தர்சனங்களால் ஒவ்வொரு சித்தாந்தத்தைக் கூறி முடிவில் அந்தந்த அதிகாரிகளையெல்லாம் வேதாந்த தர்சனத்திலேயே கொண்டுவந்துவிட வேணுமென்றே ஸகல தர்சனங்களுக்கும் ஸகலமான மகரிஷிகளுக்கும் கருத்து. இதன் விரிவை ஷட் தர்சனங்களின் ஸாமாஸ்யம் (ஒற்றுமை) என்னும் மற்றொரு உபன்யாஸத்தில் கூறுவாம். வேதாந்த தர்சனம் மற்றதர்சனங்களில் கருத்துள்ளதாய் மற்றதில் அடங்காது. மற்ற தர்சனங்களே வேதாந்த தர்சனத்தில் கருத்துள்ளதுகளாய்ஸர்வ தர்சன சிரோமணியாகிய வேதாந்த தர்சனத்தில்அடங்குகின்றன என்பது இவ்வுபன்யாஸத்திலேயேபிறகுகூறப்படும். ஆகையால் இதுகாறுங்கூறியபடி யாகம் முதலிய கர்மங்களுக்கு ஸ்வர்க்கம் முதலியவைகளை உண்டுபண்ணுவதற்கு மீமாம்ஸகர்களின் ஸித்தாந்தப்படி அபூர்வம் த்வாரமென்றும் வேதாந்திகளின்ஸித்தாந்தப்படி ஈசுவரப்ரஸாதம் த்வாரமென்றும்முடிந்தது.

(தொடரும்)

போலகம், ஸ்ரீ ராமசாஸ்திரிகள்,

---

# பிதிருக்கள் கடன் தீர்த்தல்.

பரமபுருஷார்த்தமான நித்யஸுகம் பெறுவதற்கு ஸ்வதர்ம்வர்ணாச்ரமதர்மபரிபாலனமே சிறந்த உபாயமாகும். பிரம்மசர்யாச்ரமத்திலிருந்து வேதமோதி அந்தந்த காண்டரிஷிகளுக்கு தர்ப்பண ஹோம உபஸ்தானங்களால் திருப்திசெய்வித்து மகிழ்விப்பதே ருஷிக்கடன் தீர்க்கிறதாகும்.

இல்லறம் புகுந்து யக்ஞானுஷ்டானங்களால் தேவர்களைத் திருப்திசெய்விப்பது தேவர்கள் கடன்தீர்த்தலும் பிரஜைகளை உண்டுபண்ணுவதால் பிதிருக்களின்கடன் செலுத்துவதுமாகிறது.

ऋणानि त्रीण्यपाकृत्य मनो मोक्षे निवेशयेत् ॥

என்கிறபடி இம்முக்கடனையும் இம்மானிடஉலகில் நிவர்த்திசெய்யாதவரையில் எவ்வுலகு சென்றாலும் அங்கும் இந்த டிக்ரி பாக்கி நிறைவேற்றப்பட்டு பின்தொடர்ந்து வந்துகொண்டேயிருக்கும். கொடுக்காதவரையில்ஸம்ஸாரபந்தம்பீடித்துக்கொண்டேயிருக்கும்

நமது பாரதநாட்டில் அநேக ஜீவன்முக்தர்கள் யாகாதிகர்மானுஷ்டானம் செய்ததைக் காணவில்லையே என்றால் அவர்கள் கீதையிற்கூறியபடி इह जन्मनि जन्मान्तरे वा பூர்வஜன்மத்தில்ஸத்கர்மாக்களை அனுஷ்டித்து கர்மசேஷத்தால் கடைசிஜன்மாவாக அவதரித்திருக்கலாம் என்றே அம்மகான்களைக் கூறவேண்டும். பிரஸ்தாபவிஷயத்தில் முன் இரண்டுகடன்களை எப்படியாவது கொடுத்துவிடலாம். மூன்றாவது மனுஷ்யயத்னத்தில் ஆகக்கூடியதில்லையே என்று கவலையுறுவோர்க்கும் மகர்ஷிகள் உபாயத்தைக் கற்பித்திருக்கிறார்கள். ஆயினும்

औरसः पुत्रिकापुत्रः क्षेत्रजो गूढजस्तथा ।
दत्तात्मा च सहोढश्च ह्यपविद्धस्सुतस्तथा ।
कानीनश्च पुनर्भूजः दत्तः क्रीतश्च कृत्रिमः ॥
दत्तात्मा च सहोढश्च ह्यपविद्धस्सुतस्तथा ।
एते द्वादश पुत्रास्स्युस्संस्कार्यास्स्युर्द्विजातयः ॥

ஔரஸன் முதலான 12வித புத்திரர்களைக் கூறி இவர்களில் ஔரஸனைத்தவிற 11 கௌணபுத்திரர்களை கலியுகத்தில் நிஷேதம் செய்தனர். இதனாலும் புத்ரப்ராப்திக்கு ஹேதுவில்லையே என்றால் மேலே விசாரிப்போம்.

மேற்கண்ட 11 புத்திரர்களை நிஷேதம் செய்ததில் தத்தபுத்ரனையும் சேர்த்துச் சொல்லியிருப்பதால் தத்தபுத்ரபரிக்ரஹம் சாஸ்திரசம்மதமில்லையோவென்றால் சாஸ்திரசம்மதமென்பதை கீழ்க்கண்டவைகளால் அறியத்தக்கது.

ब्राह्मणानां सपिण्डेषु कर्तव्यः पुत्रसंग्रहः ।
तदलाभे सगोत्रे वा न चान्यत्र तु कारयेत् ॥

தத்தபுத்ரனை புத்ரனாகப்பெறுவது கூடாதென்பது ஸ்வகோத்திரமில்லாதவனைப்பற்றியதென்பதாகச்சௌனகர் கூறினார். ஸபிண்

டன் அல்லது ஸகோத்திரன் இவர்களே சிறந்தவர்கள். கலியுகத்தில் அநேகமாய் பணப்பேராசையால் ஏகபுத்திரன், சிமந்தபுத்திரன், தௌகித்திரன், தங்கைதமக்கை பிள்ளை, ஸகோதரன், அஸகோத்திரன், உபநயனமானவன், விவாகிதன் விவாஹத்துக்கு யோக்யமில்லாதவளிடத்தில் பிறந்தவன், ஸ்வீகாரத்தாயாருக்கு அதிகமான வயதுள்ள பிள்ளை முதலான பல விபரீதங்கள் நேருவதால் தத்தனையும் தடுத்ததேதவிர இவ்விததோஷமில்லாவிடில் தத்தனையும் சாஸ்திரசம்மதமான புத்திரனாக அங்கீகரித்திருக்கிறார்கள்.

सर्वेषामेव वर्णानां ज्ञातिष्वेव न चान्यतः ।

பங்காளிகளிடத்தில் பெறவேண்டுமென்றிருப்பதால் பங்காளி இல்லாத ஸகோத்திரனே தள்ளப்பட்டிருப்பதால் மற்ற கோத்திரங்களுக்கும் சிவ சிவ ஸம்பந்தம் எவ்விதமுண்டாகும்? ஆகையால் கலியுகதர்மங்களையுரைத்த முனிவர்கள் தத்தபுத்ரனையும் முக்ய புத்ரனாகக்கணனம்பண்ணி அதுவும் ஸகோத்திரத்திலேயேயிருக்க வேண்டுமென்று சித்தாந்தம் செய்தார்கள்.

भ्रातॄणामेकजातानामेकश्चेत् पुत्रवान् भवेत् ।
सर्वे ते तेन पुत्रेण पुत्रिणो मनुरब्रवीत् ।

“ஒரு தாய் தகப்பனுக்கு ஜனித்த ஸகோதரர்களில் ஒருவன் புத்ரவானாயிருந்தால் புத்ரரில்லாத மற்றெல்லோருமே புத்ரவான்கள்” என்று மனு கூறியிருக்கிறாரே என்றால் அதற்கு கருத்து “ஸகோதரன் குமாரன் இருக்கும்போது வேறொருவரின் புத்ரனை க்ரஹிப்பது கூடாது” என்பதே ஆகும். அவ்விதம் தாத்பர்யம் கூறாவிடில் புத்திரனில்லாதவனுக்கு பத்னீ, பெண் இவர்களை கர்மத்துக்கு அதிகாரிகளாகக் கூறுகிற நியாயத்திற்கு விரோதம் நேரிடுகிறது. ஸ்திரீயானவள் விவாஹத்தில் ‘ஸப்தபதீ’ எனும் கிரியையால் பத்னிபாவத்தை அடைவதுபோல் தத்தபுத்ரனும் ஜாதாதி ஸம்ஸ்காரங்களாலும் தத்தஹோமம் பிரதிக்ரஹமிவைகளாலும் புத்ரனாகிறான்.

पुत्रं गृहीत्वा संस्कृत्य वयोवस्थाश्रितः पिता ।
नाम गोत्रादि तत्सर्वं कुर्यादौरसवत्ततः ।
उत्तमं द्वादशाहेषु दत्तस्य ग्रहणं शिशोः ।
आचोलान्मद्ध्यमं हीनमूर्ध्वमामौञ्जिबन्धनात् ।

ஸ்வீகாரபுத்திரன், தத்து எடுத்துக்கொள்ளும் தம்பதிகளுக்கு பெற்றெடுக்கக்கூடிய யோக்கியதையுள்ள வயதுடையவனாயிருக்க வேண்டும். இதனால் தனக்கு பிந்தின ஸஹோதரஸ்வீகாரமும் அசாஸ்திரீயமே, பன்னிரண்டாநாள் ஸ்வீகாரம் உத்தமமென்பதால் தன் தாயைத் தெரிந்துகொள்வதற்குமுந்திய ஸ்வீகாரம் செய்துகொள்ளக்கூடிய காலம் போற்றப்பட்டது.

वासिष्ठः– न ज्येष्ठं पुत्रं दद्यात् प्रतिगृह्णीयाद्वा ।

न चैकं पुत्रं स हि सन्तानाय पूर्वेषाम् ॥

न स्त्री पुत्रं दद्यात् प्रतिगृह्णीयाद्वाऽन्यत्रानुज्ञानाद्भर्तुः ।

पुत्रं प्रतिग्रहीष्यन् बन्धूनाहूय राजनि चावेद्य स्यादि ।

ஜேஷ்டபுத்திரனை கொடுக்கவும் வாங்கவும் கூடாது. ஏகபுத்ரனை கொடுக்கக்கூடாது. அவன் தன் முன்னோர்களைக் கரையேற்றக் கடமைப்பட்டவன். ஸ்திரீ கொடுக்கக்கூடாது, பர்த்தாவின் அநுமதியின்றி வாங்கக்கூடாது தத்து எடுக்கிறவன் பந்துக்களுக்கும் § அரசனுக்கும் தெரிவித்து பிராமணஸபையில் தன் கிருஹ்யத்தில் கூறியபடி ஹோமங்களைச்செய்து புத்திரனையடையவேண்டும். பெரும்பாலும் லௌகிகாக்னியிலேயே ஸ்வீகாரஹோமம் நடக்கிறது.

सुतार्थकर्मणां होमो लौकिकाग्नौ विधीयते ।

என்று ஆன்ஹிககாண்டத்தில் இருக்கும் வசனத்துக்கு सुतार्थं नामकरणहोमादिकं என்று டிப்பணி எழுதப்பட்டிருக்கிறது.

ரித்விக்குகள் இல்லாமல் தான் செய்யக்கூடிய ஹோமங்கள் யாவற்றும் ஔபாஸனாக்னியிலேயே செய்யவேண்டும் என்றும்,

कर्म स्मार्तं विवाहाग्नौ कुर्वीत प्रत्यहं गृही ।

यस्य अग्निसाद्ध्यस्य कर्मणः फलं साक्षात् कर्मान्तरप्रणाल्या वा जायापतिगामि वा भवति तत् कर्म गृही स्वौपासने कुर्यात् ।

கிருஹஸ்தன் ஸ்மிருத்யுக்தகர்மாக்களை தினந்தோறும் ஔபாஸனாக்னியில் செய்யவேணும். அல்லது எந்த கர்மாவின் பயன்

§ அரசனுக்கும் தெரிவிக்கிறதென்பது இப்பொழுது ஸ்வீகாரபத்திரமாயிருக்கிறது.

நோகவோ மாருகவோ தம்பதிகளையாவது அவர்களில் ஒருவரை யாவது அடையுமோ அந்த கர்மாவை தன் ஔபாஸனுக்னியில் செய்யக்கடவன் என்றிருப்பதால் ஔபாஸனுக்னியில் செய்வதும் சாஸ்திரசம்மதமேயாகும். வைச்வதேவத்தை ஔபாஸனத்திலோ பசனுக்னியிலோ என்று இருவிதம் கூறியிருப்பதைக்கொண்டு பசனுக்னியிலேயே பெரும்பாலர் செய்துவருவதுபோல் இங்கும் விதுரர்கள் விஷயத்தில் ஔபாஸனம் ஸாத்யமாகாததுபற்றி லௌகிகாக்னியும் ஓர் பிரகாரத்தில் சாஸ்திரமென்றே செய்துவருகிருர்கள். சுக்லசோணிதங்களால் புத்திரன் உண்டாகிறபடியால் மாதாபிதாக்கள் இருவருமே புத்ரனை தானம் விடுதல் கிரயம் இவைகளை செய்யத்தகுதியுள்ளவர்கள் ஆகிருர்கள். ஆபத்தில் தாய் புத்திரனை ஜலபூர்வகமாக கொடுக்கலாம் என்பதும் பர்த்தாவின் அனுமதிபெற்ற ஸ்திரீயேயன்றி விதவையைக் குறித்தல்ல.

இவ்வித ஸ்வீகாரம் அத்திரிமுனி ஔர்வருக்கு கொடுத்ததாக யஜுர்வேதம் ஏழாங்காண்டத்தில் ஓர் உபாக்கியானமுளது. 'தர்மவிருத்திக்கும் ஸந்ததிவிருத்திக்கும் கிரஹிக்கிறேன்" என்று கருத்தை விளக்கும் மந்திரங்கள் இருப்பதால் ஸ்வீகாரம் வேத ஸம்மதமே. தைத்திரீயஉபநிஷத்திலும் "பிரஜையை உண்டாக்க வேணும்,ருதுகாலத்தில்செல்லவேண்டும், பௌத்திரனைஉண்டாக்க வேண்டும். ஸந்ததிநூலை அறுத்துவிடாதே" என்றும் அழுத்தமாய்க் கூறப்பட்டிருப்பது எல்லோரும் அறிந்ததே.

पुत्रेण लोकान् जयति पौत्रेणानन्त्यमश्नुते ।
अथ पौत्रस्य पुत्रेणनाकमेवाधिरोहति ।

"புத்ரனில்லாதவனுக்கு ஒரு உலகுமில்லை என்றிருப்பதால் புத்ரனுல் லோகங்களை ஜயிக்கிருர். போனுல் எல்லையில்லாப் பயனை அடைகிறுன், கொள்போனுல் ஸ்வர்க்கத்தையே அடைகிறுன்" என்றும்

पुत्रस्वीकारमात्रेण पितरं त्रायते सुतः । दत्तः पितृत्वमाप्नोति गृहीता मुच्यते ऋणात् ॥

'புத்ரனை ஸ்வீகாரம் செய்துகொள்வதால் அவன் தகப்பனை நரகத்திலிருந்து ரக்ஷிக்கிறுன். அவன் தத்தனுபினும் புத்திரனுக வந்து ஸ்வீகாரம் செய்துகொண்டவனை பிதிருக்களுடைய கடனிலிருந்து

தீர்த்துவிடுகிறேன் என்றும் அனேக வசனங்களிதுவிஷயத்திலிருக்கின்றன. பிறகே ஆத்மஜ்ஞானவிஷயத்தில் இடைவிடாது விசாரஞ்செய்து பிரம்மஸாக்ஷாத்காரம் பெற்று நிரதிசயானந்தக்கடலில் மூழ்கி தன்னை மறந்து ஸுகம் பெறக்கடவன். சுபம்.

U. வெங்கடராமன்.

---

## கும்பகோணம் வேதலக்ஷண ஸம்ரக்ஷணஸபையார் அவர்களுக்கு ஓர் விக்ஞாபனம்.

அன்பார்ந்த பண்டித சிகாமணிகளே !

தங்களால் கூட்டப்படுவதாகக் குறிப்பிடப்பட்டிருந்த அழைப்புப் பிரசுரங்களையும் ஏப்ரல் 29, 30உ களில் நடந்தேறிய சபை நிகழ்சிகள் சுதேசமித்திரனில் வெளிவந்ததையும் பார்க்க நேர்ந்தது ஆனல் லக்ஷணக்கிரந்தங்களில் ஆக்ஷேபகரமான விஷயங்களையும் சபையில் நடந்த கண்டனக்குறிப்புகளையும் அறியக்கூடவில்லை. அங்குவர இயலாத என்போன்றூர்க்கு அவ்விஷயம் தெரியவந்திருப்பின் அதற்கு மறுப்பு எழுத நாங்களும்கடமைப்பட்டிருக்கிறோம். ஆகையால் லக்ஷணபண்டிதர் அனைவரும் அறியக்கூடியவாறு பத்திரிகை வாயிலோ, அல்லது பிரசுரவாயிலோ அனுவாத முறையில் தெரிவித்தால் எங்கள் கடமையைச் செய்ய உதவி செய்தவர் ஆவீர்கள்.

பஞ்சாபகேசகனபாடிகள்,
வேதசாஸ்திர பாடசாலை உபாத்யாயர்,
அம்பில்.

---

## விசித்திர விசாரம்.

ஸ்ரீமதுரைமாநகரில் 17—5—31 ஞாயற்றுக்கிழமையிலும் 18–5–31 திங்கள்கிழமையிலும் ஸ்ரீஉத்திராதிமடம் த்வைதாசார்யாளுக்கும் மதுராவாஸிகளான அத்வைதபண்டிதர்களின் பிரதிநிதியான பிரும்மஸ்ரீ தேதியூர் சுப்பிரமணியசாஸ்திரிகள் அவர்களுக்கும் "அத்வைதம் அவைதிகமா? வைதிகமா?" என்ற விஷயத்தில் விசாரம் நிகழ்ந்தது. அச்சபையில் விசிஷ்டாத்வைதபண்டிதர்களும் ஸம்ஸ்கிருதம் கற்ற (Lawyers) வக்கீல்களும் மத்தியஸ்தர்களாயிருந்தனர். அவர்களாவன

(Sd.) ஸ்ரீ நாராயணய்யங்கார் 18—5—31 காலே.
,, N. S. Viswanathaiyer ,, ,,
,, V. Narayanasami ,, ,,
,, திருநாராயணய்யங்கார் ,, ,,
,, R. Ganapathi Iyer ,, ,,

உடனுக்குடனே ஸம்ஸ்கிருதத்தை எழுதி பின்பு மொழிபெயர்த்தவர் K. V. சுப்பிரமணியசாஸ்திரிகள்.

த்வைதாபிமானிகளும் அத்வைதாபிமானிகளும் உதாஸீனர்களான பொதுஜனங்களும் விசிஷ்டாத்வைத பண்டிதர்களுமாக ஆயிரக்கணக்கான ஜனங்கள் கூடினர்.

நிகழ்ந்தபடி சுருக்கமாய் எழுதப்படுகிறது.

விஷயம் அத்வைதம் அவைதிகமா வைதிகமா என்பது.

[ஷை தினம் ஸாயம் 4-மணிக்கு ஆரம்பம்.]

ஸ்ரீத்வைதாசார்யாள்:- ஸர்வஞ்ஞத்வம் அல்பஞ்ஞத்வம்முதலான தர்மவிசிஷ்டங்களான தத்வம் அர்த்தங்களுக்கு (அதாவது பரமாத்மாவுக்கும் ஜீவனுக்கும்) அபேதம்பாதிதமாகையால் "தத்வமஸி" என்ற வாக்கியத்திற்கு லக்ஷணை ஒப்புக்கொள்ளப்படுகிறது. முக்கியார்த்தம் விடப்படுகிறது. அப்போது அபேதபரந்தான் என்பது எப்படியாகும்? இவ்விதம் வேதாந்தவாக்கியங்களுக்கு தங்கள் மதத்தில் அகண்டார்த்த பரத்வம் ஒப்புக்கொள்ளப்படுகிறது. அப்படியாகும்போது அபேதம்தோன்றுகிறதில்லை. ஆனாலோ चिन्मात्रमेव சின்மாத்திரத்தைத்தான் அறிவிக்கும். இவ்விதமாகும்போது அபேதத்தில் பிரமாண்ணியம் என்பது எங்ஙனம் கூடும்?

ஸ்ரீசாஸ்திரிகள்:— ஸமாநாதிகரணப்ரயோகபலத்தால் ஜீவனுக்கும் பிரம்மத்திற்கும் அபேதம் தோன்றுகிறது. அதை நிர்வாஹஞ்செய்வதற்காக முக்கியார்த்தம் விடப்படுகிறது. லக்ஷணை ஒப்புக்கொள்ளப்படுகிறது. அந்த லக்ஷணைக்கு அபேதத்தைமட்டிலுந்தான் அறிவுக்குந்தன்மையுண்டு என்பதற்கு ஸமாநாதிகரணப்ரயோகமே நியாமகம். மஹாவாக்கியத்திற்கு சைதன்யத்தை மட்டிலும் அறிவிக்குந் தன்மையுளது என்று அங்கீகரிக்கப்படுகிறபடியால் ஞானத்திற்கு அபேதம் விஷயமாகாவிட்டால் ஓர்வித நஷ்டமுமில்லே, அபேதத்தை ஸாதிக்கவேண்டியில்லாததால் அபே

தம் தோன்றுகிறதில்லை என்பது எங்களுக்கு அலங்காரமே. சுத்த ப்ரம்மத்திற்கும் ஞானநிரூபிதவிஷயத்துவம் இல்லை.

ஸ்ரீத்வைதாசாரியாள்— அத்வைதம் வைதிகமா? இல்லையா? என்றல்லவா விசாரம். மஹாவாக்கியத்தாலுண்டாகும் அறிவில் அபேதவிஷயம் இல்லை. அபேதம் எங்களுக்கு ஸாதிக்கவேண்டியதில்லை. வேதத்தாலுண்டாகும் அறிவில் அபேதம் விளங்குகிறதில்லை என்பதே எங்களுக்கு அலங்காரம் என்று சாஸ்திரிகளின் வார்த்தையால் நாங்கள் பயன் பெற்றவர்களானோம். चरितार्थाः ஆனோம். அத்வைதம் அவைதிகம் என்று சொல்லுகின்ற எங்களுக்கு அபேதம் வேதஜன்யஞானத்திற்கு விஷயமாகாதது என்ற அர்த்தமே இஷ்டப்பட்டபடியால் ஸமானாதிகரணப் பிரயோகத்தால் அபேதமே அறிவிக்கத் தக்கது' என்று சொல்லப்பட்டது ஒழுங்கில்லை. 'असन्नेव स भवति असद्ब्रह्मेति वेद चेत्' என்ற இடத்தில் உபநிஷத்பாஷ்யத்தில் பகவத்பாதர்களாலேயே அஸத்துக்கு ஸமமே என்று அஸத்துக்கும், அதிகாரிக்கும்அபேதமில்லாமலேயே ஸாமானாதிகரண்யம் நிர்வஹிக்கப்பட்டது. அதுபோல் இங்கும் 'தத்ஸி' என்பதற்கு. அதற்கு சமம், அதற்கதீனம். அதனால் உண்டானவன் என்பது முதலான அனேக அர்த்தங்கள் ஏற்படுகின்றன என்று ஸாமானாதிகரண்யமானது ஜீவனுக்கும் பிரம்மத்திற்கும் அபேதத்தைத் தெரிவிக்காது; சுத்தமானது வேதத்திலுண்டாகும் ஞானத்திற்கு விஷயமாகவேண்டுவதில்லை என்பது எங்களுக்கு அனுகூலமே. சுத்தப்பிரம்மத்திற்கு வேதரூபமான பிரமாணம் இல்லை, என்று சொல்லுகிறவர்களுக்கு லக்ஷணையை ஒப்புக்கொண்டாலும் விருத்த தர்மங்களை விடமுடியாததலால் அபேதமும் ஏற்படாது.

ஸ்ரீசாஸ்திரிகள்— பாதகம் (बाधकं) இல்லாமற்போனால் ஸாமானாதிகரண்ணியப் பிரயோகமானது அபேதத்தை அறிவிக்கக்கூடியதே. असन्नेव स भवति என்றவிடத்தில் பிரத்யகாத்மாவிற்கு முயல்க்கொம்புக்குச் சமானமான யோகக்ஷேமத்துவாபத்திரூபமான பாதகமிருப்பதால் அங்கு ஸாமானாதிகரண்யமானது அபேதத்தையறிவிக்கிறதில்லை. ஆகையாலேயே அங்கு பாஷ்யக்காரர்களால் 'அஸத்துக்குச் சமம்' என்று வியாக்கியானம் செய்யப்பட்டது. तत्त्वमसि என்கிறவிடத்திலோவென்றால் அவ்வித

பாதகமில்லாததால் ஸாமானாதிகரண்யம் அபேதத்தையே போதிக்கிறது. நிர்விசேஷபிரம்மமும் ஜீவபிரம்மங்களின் அபேதமும், சப்தஜன்யக்ஞானத்திற்குவிஷயமாகாதபோதிலும்சப்தஜன்யதாத்பர்யத்திற்கு விஷயமாகுவதை ஒப்புக்கொள்வதால் பிரம்மத்திற்கு சாஸ்திரப் பிரமாணகத்வம் ஏற்படுகிறதால் அத்வைதம் அவைதிகமல்ல. அதனால் மற்றவர்களின் சரிதார்த்ததையென்பது தள்ளப்பட்டது. சைத்தியம் ஔஷண்யம் என்பதுபோல் ஜீவேச்வரர்களுக்கு எங்களால் தர்மங்கள் ஒப்புக்கொள்ளப்படவில்லை. ஆனாலேஸ்படிகலெளஹித்யம்போலும்தாணுபுருஷர்கள்போலும்மாயாரூபமான காரணோபாதியின் வசத்தால் ஈச்வாதர்மங்களும், அவித்தியாரூபகார்யோபாதி வசத்தால் ஜீவதர்மங்களும் ஒப்புக்கொள்ளப்படுகின்றன. ஆகையால் எவைகள் பாதிக்கப்பட்டனவோ அவைகள் பாதிக்கப்பட்டனவே.

[ஸந்தியாவந்தன காலாதிக் கிரமபயத்தால் சாஸ்திரிகளால் நாளை காலமே 7-மணிபடிக்கும்போது மறுபடியும் தொடங்க வேண்டியது என்று தீர்மானிக்கப்பட்டது]

18—5—31

[சபையோர் யாவரும் சேரவேண்டியிருந்ததால் திங்கட்கிழமை காலை 7-மணிக்கு வாதம் தொடங்கப்பட்டது]

ஸ்ரீத்வைதாசாரியாள் **असन्नेव स भवति** என்றஇடத்தில்பிரம்மம் அஸத்து என்ற ஞானமுள்ள ஸத்துக்கு அஸத்தியம் என்ற வார்த்தை எப்படி அவைகளின் அபேதத்தை பாதிக்கின்றதோ அப்படி ஸர்வக்ஞத்துவம், ஸர்வோத்தமத்துவம் முதலானதோடு கூடின பிரம்மத்திற்கும், அல்பக்ஞத்துவம் முதலானதோடுகூடின ஜீவனுக்கும் ஐக்கியமானது விருத்தமான தர்மங்களால் ஆக்கிரமிக்கப்பட்டபடியால் ஏற்படாது என்று ஸர்வஸித்தாந்த ஸங்கிரஹத்தில் **सर्वेशत्व स्वतन्त्रत्व सर्वज्ञत्वादिभिर्गुणैः ।** இது முதலானதாலும், விவேகசூடாமணியில் —

**ऐक्यं तयोर्लक्षितयोर्नवाच्य योर्निगद्यतेऽन्योन्य विरुद्धधर्मिणोः ।**
**खद्योत भान्वोरिव राजभृत्ययोः कूपाम्बुराश्योः परमाणुमेर्वोः ॥**

இது முதலானதாலும் ஸர்வக்ஞத்து விசிஷ்டபிம்மத்திற்கும் அல்பக்ஞத்துவ விசிஷ்டஜீவனுக்கும், ஐக்கியம் ஒப்புக்கொண்

டால் பாதகம் இருக்கிறதென்று அத்வைத பாஷ்யகாராளாலேயே ஒப்புக்கொள்ளப்பட்டபடியால் பாதகம் இல்லை என்பது ஒழுங்கில்லை. மேலும்,

‘त्वं ब्रह्म त्वं यज्ञः त्वं लोकः अहं ब्रह्म अहं यज्ञः अहं लोकः’

என்ற பிருஹதாரண்யகோபநிஷத்தில் ஸாமானாதிகரண்யமிருந்த போதிலும் த்வம்ப்ராஹ்ம முதலான சப்தங்களால் போதிக்கப்படுகிறவைகளுக்கு ஐக்கியபாதகமிருப்பதால் அவ்விடத்தில் உன்னால் செய்யப்படுகிற வேதாத்தியயனம், உன்னால் செய்யப்படுகிற யக்ஞம் உன்னால் செய்யப்படுகிற உலகங்கள் ஜயிக்கத்தக்கவை. இது முதலான அர்த்தஞ் செய்து, ஸாமானாதிகரண்ணியம் நிர்வஹிக்கப்பட்டது. அப்படி ‘தத்வமஸி’ என்ற இடத்திலும் விசிஷ்டங்களின் ஐக்கியத்தில்பாதகமிருப்தால் வேறு அர்த்தம் ஸ்வீகரிக்கத்தக்கது. அபேதமோவென்றால் கூடாது. அபேதம் வேதஜன்யக்ஞானத்திற்கு விஷயமாகாவிட்டாலும் வேததாத்பர்ய விஷயம் ஆனதால் நிர்விசேஷ பிரம்மஸித்தியும் ஐக்கிய ஸித்தியும் ஏற்படுகிறது என்று சொல்லப்பட்டதே, அது ஸரியல்ல.

**सैन्धवमानय** ஸைந்தவத்தைக்கொண்டுவா என்றால் (உப்பு குதிரை என்று பொருள்) அநேகமர்த்தமுள்ளதால் ஸந்தேஹமேற்படும்போது அர்த்தம் நிச்சயிப்பதற்கு ! தாத்பர்யத்தையறிவிக்கும் பிரமாணம் வேண்டுவது அவசியம். அப்படியே தத்வமஸி என்ற வாக்கியத்திற்கு அர்த்தசந்தேகமிருப்பதால் தாத்பர்யஞாபகமான பிரமாணம் சொல்லப்படவேண்டும். அதுவுமில்லை. பிரம்மத்திற்கும் அபேதத்திற்கும் ! சாஸ்திரப்பிரமாணகத்வம் என்ற வார்த்தை அஸங்கதமானது. அதற்கு **शास्त्रप्रमाणं यथार्थज्ञान-साधनं यस्येति** இது முதலானதல்லவோ விக்ரஹவாக்யம். அதனாலும் சாஸ்திரப்பிரமாணகத்வாத் என்பதற்கு சாஸ்திரஜன்யயதார்த்தஞானவிஷயத்துவம் என்று அர்த்தம் ஏற்படுகிறது. நிர்விசேஷ பிரம்மத்திற்கும் அபேதத்திற்கும் சாஸ்திரஜன்யக்ஞானவிஷயத்துவாபாவத்தையங்கீகரித்து சாஸ்திரஜன்யயதார்த்தக்ஞானவிஷயத்வம் சொன்னது என் தாயார் மலடி என்பதுபோலடிபட்டதே.

ஜீவேசதர்மங்கள் மித்தியையென்பதில் பிரமாணமில்லாமையால் அவைகள் ஸத்தியமானதால் அவ்விதமான விரோதமுள்ள

தர்மங்களோடு கூடினவைகளுக்கு அபேதம் ஸம்பவிக்காது. மேலும் ஸர்வஸித்தாந்தஸாரஸங்கிரஹத்தில்

विरुद्धधर्माक्रान्तत्वात् परस्पर विलक्षणौ ।
जीवेशौ वह्नितुहिनाविव शब्दार्थतोऽपि च ॥

என்று ஜீவேசதர்மங்களுக்கு ஔஷ்ண்யம் முதலானதின் ஸாதிருச்யஞ்சொன்னதால் ஔஷ்ண்யம் (சூடு) முதலானதுபோல் ஜீவேச்வரதர்மங்கள் எங்களால் ஒப்புக்கொள்ளப்படவில்லை என்ற சொல் பூர்வாசார்யகிரந்தத்தோடு முறண்பட்டது. ஸ்படிகலௌஹித்ய திருஷ்டாந்தமும் பொருந்தாது. உபாதிகள் ஸம்பவிக்காததால் என்று.

[இந்த ஸந்தர்ப்பத்தில் சுமார் 10 மணியடித்தது. ஸ்ரீசாஸ்திரிகளால் முன்பு எங்களுடைய பாஷ்யகாரர்களாலே செய்யப்பட்ட பூர்வபக்ஷவாக்கியத்தையே ஸித்தாந்தம்போல் எடுத்துக்கொண்டு உங்களுக்கு அநுகுணமாக வர்ணிக்கப்படுகிறது, இருக்கட்டும். அப்படியிருந்தாலும் சொல்கிறேன் என்று பதிலுரைக்கத்தொடங்கப்பட்டது. இத்தருணத்தில் ஸ்ரீத்வைதாசார்யாளாலும் அவர்களைச் சார்ந்தவர்களாலும் இவ்வளவோடே வாக்கியார்த்தம் நின்றுவிடட்டும் என்று சொல்லப்பட்டது. ஸ்ரீசாஸ்திரிகளோ என்னால் சொல்லப்படும் ஸித்தாந்தம் கேட்கத்தக்கதே, ஸாயங்காலத்திலோ எத்தனை நாட்களோ இருந்து மேல்மேல் சொல்ல நான் சக்தனாயிருக்கிறேன் என்று சொல்லப்பட்டது. இந்த சந்தர்ப்பத்தில் கும்பகோணத்தில் பூர்வபக்ஷத்தோடு முடித்து ஸித்தாந்தஞ் செய்ய அவகாசங்கொடாமல் எப்படி கோலாஹலத்தோடே உபரமிக்கப்பட்டதோ அப்படி இங்கு செய்யக்கூடாது என்று தடஸ்தர்களால் சொல்லப்பட்டது. விசேஷமாக ஸ்ரீ-உ-வே நாராயண அய்யங்கார் ஸ்வாமிகளால் அவசியம் சாஸ்திரிகளின் அபிப்பிராயம் கேட்கத்தக்கதே என்று அடிக்கடி சொல்லப்பட்டது. இத்தருணத்தில் மத்தியஸ்தர்களின் நடுவில் ஸபையில் சாஸ்திரிகளாலே ஸம்ஸ்கிருதத்தில் ஸித்தாந்தஞ் செய்யப்பட்டது. அந்த பாகம் பின்னால் வரும்.

K. V. சுப்பிரமணியசாஸ்திரி.

# ஓர் ஸமரஸவார்த்தை.

ஹிந்துமுஸ்லீம் மதச்சண்டைகளால் பல மண்டைகள் உடைந்து ரத்தஆறு பெருக்கெடுத்து ஓடியிருப்பதைக்கண்டும் ஸ்ரீஉத்திராதிமடம் ஸ்வாமிகள் மற்றோர் மதச்சண்டைக்கு அஸ்திவாரம் போடுகிறாரா என்று ஓர் சமாதானதூதர் கேட்கிறார்.

யுத்ததளவாட சேனாதிபதி எச்சரிக்கை செய்வதாவது:—பூமாதேவி பாரம் சகிக்கக்கூடவில்லை, இருக்கும் சண்டைகள் போதாது, புதுச்சண்டை வேண்டும் என்று கலிபுருஷன் பிரார்த்தித்தான். மஹாபுருஷன் ஒருவரால் கண்டறியாத புதுமதச்சண்டையின் யுத்தமுழக்கம் செய்யப்பட்டிருக்கிறது.

ஓர் நியாயவாதியின் கேள்விகள்:—

1. த்வைதாத்வைதமதச்சண்டைக்கு மூலகாரணம் யார்?

2. இச்சபைக்கு வரவேண்டுமென ஸ்ரீ உத்திராதிஸ்வாமிகள் சார்பாக ரிஜிஸ்டர் நோட்டீஸ்கள் சில பண்டிதர்களுக்கு அனுப்பப்பட்டதாம் இது அழகின் ஸ்வரூபமா? அல்லது பெருமையின் உருவமா?

3. அத்வைதம் அவைதிகம் என புராணமொன்றில் காணப்படுவதாக புலவர் ஒருவர் புகன்றார். மற்றவர் அது ப்ரக்ஷிப்தம் (சரியான பாடமல்ல) என்று பகர்ந்தார். இவைகள் காலத்தைக் கழிக்க ஏற்பட்ட சாதாரண உலகவினோத உண்மைசம்பாஷணைக் கதைகள் என்று எண்ணலாம். இதை காதால் கேட்க சகியாத பெரியார் ஒருவர் அத்வைதம் அவைதிகமே என்று புஹிரங்கப்படுத்துகிறார். இது ஒழுக்கத்தின் நிறைவா? அல்லது நவநாகரீகத்தின் நாட்டமா?

(ஒருவருக்கொருவர் அன்புடன் பழகிவரும் காலத்திலேயே) ஓர் மைனாரிடி வகுப்பினர் பிரிதோர் மெஜாரிடிவகுப்பைத் தழுவி விடாமல் தடுப்பதற்காக ஆத்மாக்ஷணார்த்தம் அத்வைதம் அவைதிகம் என கூறப்பட்டதாக ஓர் சிலர் சொல்லுகிறார்கள். தன்மத தத்வங்களை சாவதானமுறையில் பாப்பசக்தியற்ற ஒருவர் மற்றதோர் பெரிய தொகையினரான மதத்தினர் மனம் புண்படப்

புகன்ற 'அவைதிகம்' என்ற வார்த்தை சரியா தவறு? இத்தகைய பல கேள்விகள் எழுந்தபோது தன் வாயால் அத்வைதம் அவைதிகம் என்ற வார்த்தை சொல்லப்படவில்லை என்று மகான் ஒருவர் மதுரமாக மறைத்துப் புகன்றாராம். இது இடம் பொருள் ஏவலை அனுசரித்துச் சொல்லப்படும சமாசதோற்றமாகிய சொல்லா? அல்லது த்ரிகாலத்திலும் மாறாத ஸத்ய உரையா?

(தொடரும்)

ஸமரஸாபிமானி.

---

# வார விருத்தாந்தம்.

ஸத்யாக்ரஹமா துராக்ரஹமா? தேசியவிஷயத்திற்காக ஸ்ரீயுத காந்தியால் ஆரம்பிக்கப்பட்டு பலரால் கைகொள்ளப்பட்டது ஸத்யாக்ரஹம் என வழங்கப்படுவது இது ஏதேனும் தைவானுக்ரஹத்தால் பலனையளித்திருக்கலாம், இதைக்கொண்டு எல்லா விஷயங்களிலும் தலையிடுவது தற்கொலையாகுமென இன்றல்லது என்றேனும் உலகமறியப்போகிறது. சென்றவாரத்தில் ஐம்பதுவயதான ஒருவர் பதினைந்துவயதான பெண்ணை மணக்க உத்தேசித்தாராம் அதைப் பல தொண்டர் ஸத்யாக்ரஹம் செய்ததால் கைவிட்டாராம். பெண்ணுக்கு அதிகவயதானதால் கிரமமாக விவாஹத்திற்குப் பிறகு செய்யவேண்டிய அக்னி பூஜைசெய்யாததாலும்அதை அசாஸ்திரீயமென நாம் கூறுவாம்- ஆண்பெண்கள் மனமொப்பி நடக்கும் இதில் தலையிட எவருக்கு என்ன உரிமையுளது: ஆதலின் இது ஸத்யாக்ரஹமாமோ ?

இங்கு பயன்படாததேன் ?:- டில்லியில் ஓர் மஹம்மதிய உபாத்தியாயர் தன் மதத்தின் மற்றோர் வகுப்பைச் சற்று தாழ்த்தி உபன்யசித்தாராம். அதனால் 6-மாத சிக்ஷையும் 500 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது. இங்கு வைதிகர்களை தூஷிக்காத பத்திரிகையில்லை. தலைவரில்லை. இச்சட்டம் அரசாங்கமே வாதியாயிருக்க இடமளிக்கிறது, அப்படியிருந்தும் இங்கு ஏன் வேலை செய்யவில்லை? நமது மதாபிமானக் குறைவாலே அல்லாது ஸகன சக்தியால் என நினைக்கமுடியவில்லை.

எதையும் விட கற்பே மேலானது:- பம்பாயில் தேசவேலையில் ஈடுபட்டு சிறைசென்ற மாதர்கள் தங்கள் கற்பை அழிக்கமுயன்றதாக ஒருவர் மேல் வியாஜ்யம் கொடுத்தனர். அந்த விஷயத்தைப் படிக்கும்போது எந்த மனிதனும் ஆஸ்திகனும் அந்நிலையைக்கண்டு கண்ணீர் விடாமலிருக்க முடியாது. அங்கு நடந்ததைச் சொல்ல அவர்களே வெட்கிக்கின்றனர். நடந்ததைக் கடவுளறிவர். சரீரத்தைத்தொடுவதும்சிருங்காரமாகப் பேசுவதும்பாதிவ்ருத்யபங்கமே. இவர்கள் பேசாவிடினும் சக்தியிருந்தும் விஷயமறிந்தும் இதுபோன்ற காரியங்களில் தலையிட்டது குற்றமே. நமது தேசத்திற்கு கௌரவமே பாதிவ்ரத்யத்தால் தான். தேசம் குலம் மதம் எல்லாவற்றையும் காத்ததாகும். இல்லையேல் எல்லாவற்றையும் அழிப்பதாகும்.

படியளப்பவர் யார்:- நமது சாஸ்திரங்களில் நாம் கற்றவரை கர்ப்பத்திலுள்ள சிசுவுக்கும் பாறையிலுள்ள தேரைக்கும் ஏன் எண்பத்து நாலுலக்ஷம் ஜீவராசிகளுக்கும் அவரவர் கொடுத்துவைத்தற்கேற்க பரமனே படியளிப்பதாக அறிந்துளோம். கலிபுராணத்திலிருந்து சில தலைவர்களும் பத்ரிகைகளுந்தான்படியளிப்பதாக அறிய வேண்டியிருக்கிறது. பத்தாண்டுகளுக்கோர் முறை ஜனங்களதுகணக்கெடுப்பதுவழக்கம். இவ்வாண்டுகணக்கெடுத்ததில் நூற்றுக்குப்பத்து அதிகமாயிருப்பதாகத் தெரிகிறது. விளைபொருள் அதிகமாகாமல் முன்போலவே விளைவதால் அதிசஜனங்கள் பிழைப்புக்கின்றிதவிக்கநேரிடும்- ஆதலால்ஜனங்கள் ப்ரஜோத்பத்தி செய்வதைத் தடுக்கவேண்டுமென்று சில தலைவர்களும் பத்திரிகைகளும் சர்ச்சை செய்கின்றன ஆரா த்துயரம் அடைகின்றன புத்ரஸம்பத்தி உண்டாவதற்காக பலர் பலவிதப்ரயத்னம் செய்தும் கிட்டுவதில்லை. சிலர் வேண்டாமென்றாலும்பிறந்துகொண்டேயிருக்கிறது. பிறப்பதைப் புருஷப்ரயத்னத்தால் தடுக்க முடியுமாயின் குழந்தை பிறக்காமல்கவலைப்படுவோரது மனதை ஸந்தோஷிக்கும்படி செய்ய இவர்கள் ஏதேனும்லௌகிக ஸாதனம் தேடியிருக்கின்றனரா எனக்கேட்கிறோம்.

ஸ்ரீவத்ஸ வே. சோமதேவசர்மா.